Ts7T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2022**

-----

**வகுப்பு 7**

காலம்: 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 60

**பகுதி - I**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5

1) உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ...............
அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை

2) பெருங்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............
அ) பெரு+கடல் ஆ) பெருமை+கடல்
இ) பெரிய+கடல் ஈ) பெருங்+கடல்

3) கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ...............
அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு

4) என்று+உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............
அ) என்றுஉரைக்கும் ஆ) என்றிரைக்கும்
இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும்

5) காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம்
அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5

6) கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ...............
7) கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ...............
8) இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ............... எனக் குறிப்பிடப்படும்.
9) தன் குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புவரிடம் ............... இருக்கக்கூடாது.
10) நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ...............

**III. பொருத்துக:** 5

11) எரா - சோறு
12) இயற்சொல் - அடிமரம்
13) பரிதி - நனி
14) உரிப்பகாப்பதம் - கல்வி
15) விழுச்செல்வம் - கதிரவன்

**பகுதி - II**

**IV. ஏவையேனும் நான்கனுக்கு விடை தருக:** 4×2=8

16) கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
17) நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
18) கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
19) நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
20) ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
21) ஓவியங்களின் வகைகள் யாவை?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

22) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

24) தொழிற்பெயரின் வகைகள் யாவை?

**VI. மனப்பாடப்பகுதி:** **4+2=6**

25) வானம் ஊன்றிய மதலை எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

26) அறிவு என முடியும் குறளை எழுதுக.

## பகுதி - IV

**VII. ஏதேனும் மூன்றனுக்கு விடையளி:** **3×3=9**

27) கேலிச் சித்திரம் என்றால் என்ன?

28) கீரைப்பாத்தியும், குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

29) பெயர்ப் பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

30) கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

31) பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.

## பகுதி - V

**VIII. ஏதேனும் இரண்டனுக்கு விடையளி:** **2×5=10**

32) ஆழ்கடலின் அடியில் கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

மதிவாணன் பள்ளிக்கு செல்ல முடிவெடுத்த நிகழ்வை சுருக்கி எழுதுக.

33) உங்கள் பகுதியில் நூலகம் அமைத்து தர நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

எங்கள் ஊர் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பகுதி - VI

**IX. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **4×2=8**

34) **கலைச்சொல் அறிக:**

ANCHOR - LITERACY

35) **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக:**

அ) கண்மணி நாளை பாடம் படித்தாள்.

ஆ) மாடுகள் இப்பொழுது புல் மேயும்.

36) **இடைச்சொல் சேர்த்து தொடர் உருவாக்குக:**

பாடல் பாடினாள்

கதவு தட்டும் ஓசை

37) **தொடரில் அமைத்து எழுதுக:**

ஏற்றுமதி

செல்வம்

திருக்குமார், மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.பள்ளி,
வல்லம் - 627809,
தென்காசி மாவட்டம்.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com